25th January 1972]

"Star" Hotels.

* 17. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether "Star" Hotels in Madras City have been permitted to serve liquor to customers ; and

(*b*) if so, the details thereof?

ஸ்டார் ஹோட்டல்கள்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகரிலுள்ள "ஸ்டார்" ஹோட்டல்களுக்கு வருபவர்களுக்கு மது வழங்க அவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் ரூ. 10,000 கட்டணம் செலுத்துவதன் பேரில் "நட்சத்திர" ஓட்டல்களுக்கு உரிமம் வழங்கப்படுகின்றது. இந்த உரிமத்தின் கீழ், மேற்படி ஓட்டல்களில் தங்கியிருப்பவர்களுக்கு மது வழங்குவதற்காக அல்லது அவர்கள் அந்த ஓட்டல்களில் உள்ள தங்களது சொந்த அறைகளுக்கு எடுத்துச் செல்வதற்காக அல்லது அந்த ஓட்டல்களில் வழக்கமாகத் தங்கியிருப்பவர்கள், ஓட்டல் வளவினுள் இது காரியத்துக்காக உரிம அதிகாரியினால் ஏற்பளிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் மது அருந்துவதற்காக மேற்படி ஓட்டல்களில் மது வைத்திருக்க அனுமதிக்கப்படுகின்றது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சென்னை நகரத்தில் ஸ்டார் ஓட்டல்கள் எத்தனை இருக்கின்றன ? ஸ்டார் ஓட்டல் என்றால் என்ன ? ஸ்டார் ஓட்டல்களின் பெயர்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஸ்டார் ஓட்டல் என்றால் நட்சத்திர ஓட்டல் என்று பெயர். (சிரிப்பு)

நண்பர் ஜானிபாய் எதிர்பார்ப்பது போல, நட்சத்திர ஓட்டல் என்றால் ஸ்டார்கள் இருக்கிற ஓட்டல் அல்ல. அங்குள்ள வசதிகளைப் பொறுத்துக் குறிப்பிடுவதாகும். சாப்பிடும் அறைகள். நீச்சல் குளம், மாநாடுகள் போன்ற அப்படிப்பட்ட கூட்டங்கள் நடப்பதற்கான அறைகள் .நடனம் நடத்துவதற்கான இடவசதி, பூங்கா வசதி, ஏர்-கண்டிஷன் ரூம், மாடி அடுக்கு அறைகள் இவையெல்லாம் கணக்கிடப்பட்டு அவற்றை ஸ்டார் ஓட்டல் என்று நிர்ணயிக்கப்படுகிறது. அதில் 5 ஸ்டார் ஓட்டல் தான் புகழ் பெற்றதாகவும் பெருமைக்குரியதாகவும் கருதப்படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில். 5 ஸ்டார் ஓட்டல் எதுவும் இல்லை. 3 ஸ்டார் ஓட்டல்கள்தான் இருக்கின்றன.

சென்னையில் ஓட்டல் இம்பீரியல், ஓட்டல் ஓஷியானிக், ஓட்டல் அசோகா, ஓட்டல் கிளாரிட்ஜ், ஓட்டல், சவேரா, ஓட்டல் விக்டோரியா, ஓட்டல் அருண், குவின்ஸ் ஓட்டல், ஓட்டல் கணேஷ் ஆகியவை அந்த ஸ்டார் ஓட்டல்களாக கருதப்படுகின்றன.

Hippies

* 18. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to ban the movement of hippies in Tamil Nadu ; and

(*b*) whether the Government realise that the culture of Tamil Nadu is affected due to the movement of hippies?

ஹிப்பிகள்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாட்டில் ஹிப்பிகள் நடமாடுவதை தடை செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) அவர்கள் தமிழ் நாட்டில் நடமாடுவதால் தமிழ் நாட்டின் கலாச்சாரம் பாதிக்கப்படுவதாக அரசாங்கம் உணர்கின்றதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஆர். கிருஷ்னசாமி நாயுடு : ஹிப்பிகள் என்ற பெயர் எப்படி வந்தது? விளக்கம் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட உருவங்கள் கொண்டவர்களை நாம் ஹிப்பிகள் என்று அழைக்கிறோம். ஹிப்பிகள் என்று தனி இனமோ ஜாதியோ இது வரையில் இல்லை.

THIRU A. R. DAMODARAN : The cult of 'hippidom' has now extended to Indian children also. May I know whether the answer relates to foreign hippies or also to Indian hippies?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த பதில் அந்நிய ஹிப்பிகளைப் பொறுத்துத்தான் அளிக்கப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அடையாறில் உள்ள எலியட் கடற்கரையில் சென்னைக்கு வருகிற ஹிப்பிகளில் பலர் வந்து ஆடையின்றி குளிப்பதாகவும் அதன் காரணமாக அங்குச் செல்வோர் அருவருப்பு அடைவதாகவும் சொல்லப்படுகிறதே, அதுபற்றி அரசிற்குத் தெரியுமா ?